DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SANKARANKOVIL.

Calender --- CC .231 /2019
Miscellaneous ---

Preliminary Register ---

Sessions --- PW.1

Deposition of witness for Prosecution / Defence / Case

Name : வியாகப்ப பாண்டியன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the previsions of Act X of 1873 of the day

**05.02.2024**

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

**இந்த வழக்கின் காசோலையில் எதிரியின் கையொப்பத்தை தவிர மற்ற அனைத்து விவரங்களையும் நான் தான் நிரப்பிக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிதான் விவரங்களை நிரப்பி தந்தார். எதிரிக்கு நான் கொடுத்ததாக கூறப்படும் 10,00,000/-பணத்தில் ரூ.6 லட்ச(6,00,0000/-) பணத்தை கையிருப்பில் இருந்தும் இண்டு லட்சம் (2,00,000/-) பணத்தை காசோலையின் மூலமாகவும், மீதமுள்ள இரண்டு லட்சம்(2,00,000/-) பணத்தை என் நண்பன் கணேசன் மூலம் இருந்தும் நான் எதிரிக்கு கொடுத்தேன் என்று நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட இரண்டு லட்சத்திற்கான காசோலை எந்த வங்கியை சேர்ந்தது என்ற விவரத்தை நான் நிரூபண வாக்குமூலத்திலும், புகார் மனுவிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் செலுத்துகிறேன். பொதுவாக் ரூ.50,000/- மேலாக ஒருவருக்கு பணம்**

கொடுத்தால் வங்கி பரிவர்த்தனை மூலமாகத்தான் கொடுக்க முடியும் என்று சொன்னால் சரிதான். எதிரிக்கு நான் கொடுத்ததாக கூறப்படும் ரூ. பத்து லட்சத்திற்கான (ரூ.10,00,000/-) விவரத்தை நான் எனது வருமான வரி கணக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு பத்து லட்சத்தை கடனாக கொடுக்கும் அளவிற்கு எனக்கு போதிய வருமானம் இல்லை என்று சொன்னாலும், அதனால் தான் மேற்கண்ட எந்த விவரத்தையும் நான் எனது வருமான வரி கணக்கில் காண்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அரசு போக்குவரத்து கழகத்தில் டிரைவராக பணியாற்றி வருகிறேன். என்னுடன் நடத்துனராக ஆறுமுக வேல் என்பவர் பணிபுரிந்து வருகிறார். ஆறுமுக வேலுக்கும், ஆஜர் எதிரிக்கும் வியாபார ரீதியாக பழக்கம் உண்டு என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆறுமுக வேலுக்கும், ஆஜர் எதிரிக்கும் பிரச்சனை ஏற்பட்டு ஆறுமுகம் என்பவர் எதிரி மீது விருதுநகர் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்து மேற்படி புகார் மனு தளவாய்புரம் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு வந்த விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி காவல் நிலைய விசாரணையில் ஆறுமுக வேலுக்கு இந்த வழக்கின் ஆஜர் எதிரி கொடுக்க வேண்டிய ரூ. 12,00,0000/-த்திற்காக HDFC வங்கி கடமன்குளம் கிளை காசோலை -3 ஐ (காசோலை எண். 000013, 000014, 000015)ஆகிய மூன்று காசோலைகளை எதிரியிடம் கையொப்பம் மட்டும் பெற்று மற்ற விவரங்கள் எதுவும் காசோலையில் நிரப்பப்படாமல் எதிரி ஆறுமுக வேலுக்கு கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் காசோலையை தளவாய்புரம் காவல் நிலையத்தில் வைத்து இந்த வழக்கின் ஆஜர் எதிரி ஆறுமுக வேலுக்கு கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி என்னிடம் எப்போதும் எந்தவொரு பணத்தை கடனாக கேட்டதில்லை என்று சொன்னாலும், நான் அவருக்கு கடனாக எந்த பணத்தையும் வழங்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. ஆறுமுகவேல் என்பவரிடம் இருந்து நான் நிரப்பபப்படாத காசோலையை பெற்றுக் கொண்டு அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யான சங்கதிகளை கூறி மேற்படி காசோலைகள் மூலம் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>-இல்லை**

**(Complainant present. Accused present)**

(Sd/-M.Siva Rajesh)
Judicial Magistrate,
Sankarankovil.